# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.66/2010

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 புவனேஸ்வரி வயது 42, க/பெ கார்த்திக்**

**நேரம் -1.30**

**குறுக்கு விசாரணை (3ம் பிரதிவாதி தரப்பு)**

இவ்வழக்கை நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து எங்களுடையது என்ற பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தாவா வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்துக்களை 3ம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்து மேற்படியானது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதற்காக சாட்சி அதன் பின்னிட்டு சொத்து எங்களுடையது என்று பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காக 3ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். நான் பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கு எதிராக மனு மற்றும் மேல் முறையீடு மனுவை செய்யார் கோட்டாட்சியர், நில நிர்வாக ஆணையர், சென்னை, தமிழ்நாடு முதன்மை செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் கொடுத்த மனுவிற்கு வருவாய் துறையிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வருவாய் துறை மனு நிலுவையில் உள்ள போது நான் இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியது பட்டா பாஸ்புக் சட்டத்தின் கீழ் செல்லாது என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.

நேரம் 1.35

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,Arni
Arni